SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS GENERAL (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## ECS 2.15 அடிப்படை நிதிக் கணக்கியல்

## FUNDAMENTALS OF FINANCIAL ACCOUNTING

- முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக. (மொத்தம் 05 வினாக்களுக்கு விடையளிக்குக).
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை புதிய பக்கத்தில் ஆரம்பிக்கவும்.
- கணிப்பான் உபயோகிக்கமுடியும்.

நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

01. 2012.03.31 ஆந் திகதியன்று இருந்தபடி சாமர வணிக முயற்சியின் பரீட்சைமீதி பின்வருமாறு.

| விபரம் | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| மூலதனம் | | 300 000 |
| கொள்வனவுகள் | 127 000 | |
| விற்பனைகள் | | 180 000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 20 000 | |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | | 10 000 |
| 2011.04.01 இல் இருந்தபடி இருப்பு | 8 000 | |
| இறைகள் | 5 000 | |
| மின்சாரம் | 6 000 | |
| தொலைபேசி | 2 000 | |
| காப்புறுதி | 1 000 | |
| வங்கிக்கடன் வட்டி | 5 000 | |
| அறவிடமுடியாக் கடன்கள் | 100 | |
| கிடைத்த கழிவீடு | | 1 500 |
| பணியாளர் சம்பளங்கள் | 7 000 | |
| 10% வங்கிக் கடன் | | 100 000 |
| அனுமதிக்கப்பட்ட கழிவீடு | 500 | |
| கட்டடங்கள் - கிரயத்தில் | 190 000 | |
| அலுவலக சாதனங்கள் - கிரயத்தில் | 50 000 | |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 150 000 | |
| **2011.04.01 இல் இருந்தபடி பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு:** | | |
| அலுவலக சாதனங்கள் | | 5 000 |
| மோட்டார் வாகனங்கள் | | 7 500 |
| கையிலுள்ள காசு | 12 400 | |
| வங்கி | 20 000 | |
| | 604 000 | 604 000 |

பின்வரும் மேலதிக தகவல்கள் உமக்கு தரப்பட்டுள்ளன.

i. 2012.03.31 இல் இருந்தபடி இருப்பு ரூபா 5000 ஆகும்.

ii. சாமரவினால் அவரது சொந்த உபயோகத்திற்கு ரூபா 1000 பெறுமானமுடைய பண்டங்கள் வணிகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டன. இது கணக்குகளிற் பதியப்படவில்லை.

iii. அலுவலக சாதனங்கள், மோட்டார் வாகனங்கள் என்பனவற்றுக்கு கிரயத்தின் மீது ஆண்டொன்றுக்கு முறையே 10%, 5% பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படும்.

iv. 2012.03.31 இல் இருந்தபடி அட்டுறு மின்சாரம் ரூபா 800 ஆகும். முற்கொடுப்பனவு தொலைபேசிக் கட்டணம் ரூபா 500 ஆகும்.

v. அறவிடமுடியாக் கடன்களுக்கும் ஐயக்கடன்களுக்குமான ஏற்பாடு 5% ஆக இருத்தல் வேண்டும்.

வேண்டப்படவது:

(அ) 2012.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாபநட்டக் கணக்கு

(ஆ) 2012.03.31 இல் இருந்தபடியான ஐந்தொகை.

(35 புள்ளிகள்)

02. (அ). வங்கிக் கூற்று மீதியும் காசேட்டின் வங்கி நிரல் மீதியும் வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ). திருமதி. சில்வா என்பவரின் ஜனவரி 2012ம் மாதத்திற்க்கான காசேட்டின் வங்கி நிரலின் படி ரூபா 14,950 வரவு மீதியாகக் காணப்பட்டது. ஆனால் அத்தினத்திற்குத் தயார் செய்யப்பட்டிருந்த வங்கிக் கூற்று மீதியில் செலவு மீதி ரூபா 14,400 காணப்பட்டது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

1. வைப்பிலிடப்பட்ட போதும் இன்னும் தீர்வாகாத காசோலை ரூபா 2,000
2. பிறப்பிக்கப்பட்ட போதும் பெற்றவர் பணம் பெற வங்கிக்குச் சமர்ப்பிக்காத காசோலையின் பெறுமதி ரூபா 1,000
3. வங்கி நிலையியல் கட்டளைப்படி வங்கி செலுத்தியிருந்த காப்புறுதிக் கட்டணம் ரூபா 1500
4. காசேட்டின் வங்கி நிரலில் ரூபா 1,000 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது
5. வியாபாரம் தொடர்பாக ரூபா 2,000 பங்கிலாபம் வங்கிக்குக் கிடைத்திருப்பது வங்கிக் கூற்றில் காணப்படுகிறது.

6. வங்கி வணிகம் தொடர்பாக பின்வரும் கட்டணங்களை வரவு வைத்திருந்த போதிலும் வங்கிக் கூற்றிலிருந்தே அதனை அறிய முடிந்தது
   i. காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 250
   ii. வங்கிக் கட்டணம் ரூபா 200
7. மின்சாரக் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட காசோலை ரூபா 1,200 வங்கியால் மறுக்கப்பட்டிருந்தது. இது பெப்ரவரி 2ல் தெரியவந்தது

வேண்டப்படுவது :- திருத்திய காசேட்டினையும், வங்கி கணக்கிணக்கக் கூற்றினையும் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. X நிறுவனம் 01.01.2013 இல் தனது வியாபாரத்தை ஆரம்பித்தது. இந் நிறுவனத்தின் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்மந்தமான தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.

| கச்சாத்து பற்றுச்சீட்டு பட்டியல் இலக்கம் | திகதி | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| | 01.01.2010 | மூலதனமாக இட்ட தொகை ரூபா 50,000 |
| 01 | 02.01.2010 | வங்கி நடைமுறைக் கணக்கில் இட்ட தொகை ரூபா 40,000 |
| 02 | 03.01.2010 | கொள்வனவுக்கு வழங்கிய காசோலை ரூபா 15,000 |
| 03 | 04.01.2010 | தளபாடக் கொள்வனவுக்கு கொடுத்த காசோலை ரூபா 4,000 |
| 04 | 05.01.2010 | நாதனிடம் கொள்வனவு ரூபா 10,000 |
| 05 | 06.01.2010 | விற்பனை ரூபா 16,000 |
| 06 | 07.01.2010 | வடிவேலுக்கு விற்பனை ரூபா 12,000 |
| 07 | 08.01.2010 | நாதனுக்கு கொடுத்த காசு ரூபா 5,000, கழிவு ரூபா 200 |
| 08 | 09.01.2010 | வடிவேல் தந்த காசு ரூபா 7,000, கழிவு ரூபா 250 |
| 09 | 10.01.2010 | வங்கியிலிருந்து மீளப்பெற்றது ரூபா 2,000 |

மேலேயுள்ள கொடுக்கல் வாங்கல்களை மூன்று நிரல் காசேட்டில் பதிவு செய்க.

(15 புள்ளிகள்)

04. (அ). கணக்கு பதிவியலில் ஏற்படும் வழுக்களை பொதுவாக பரீட்சைமீதி வெளிக்காட்டும் வழுக்கள், பரீட்சைமீதி வெளிக்காட்டா வழுக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. பரீட்சைமீதி வெளிக்காட்டும் வழுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கினை குறிப்பிடுக.

இராசையா வியாபாரத்தின் 31.12.2009 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. அதனால் பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு ஏற்படுத்தி வரவில் ரூபா 2000 எழுதி பொதுநாட்குறிப்பு மூலம் பேரேட்டுக்கு கொண்டுசெல்லப்பட்டது. பின்னர் கணக்குகளிலிருந்து பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. கொடுத்த சம்பளம் ரூபா 2000 காசேட்டில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
2. கடன்பட்டவரான முரளிடமிருந்து கிடைத்த ரூபா 1000 காசேட்டில் பதிவு செய்யப்பட்டு முரளி கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
3. பெற்ற வாடகை ரூபா 1000 கொடுத்த வாடகையாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.
4. மாதவன் கணக்கு வரவு மீதி ரூபா. 2000 பரீட்சை மீதிக்குக் கொண்டுவரப்படவில்லை.

வேண்டப்படுவது:- வழுக்களைத் திருத்துவதற்கான பொது நாட்குறிப்பேட்டையும், தொங்கல் கணக்கையும் தயார் செய்க.

(15 புள்ளிகள்)

05. (அ). பரீட்சை மீதி என்றால் என்ன?

(03 புள்ளிகள்)

(ஆ). பின்வரும் தகவல்கள் கனீமின் வியாபார நிலையப் புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டன.

2012 ஜனவரி 1 மூலதனமாக ரூபா 150000 இட்டார்.

2 ரூபா 35000 பெறுமதியான சரக்கு காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

3 ரூபா 10000 க்கு சரக்கு விற்கப்பட்டது. (கொள்விலை 8000)

4 ரூபா 12000 க்கு கடனுக்கு விற்கப்பட்டது (கொள்விலை 9000)

5 ரூபா 2000 பெறுமதியான சரக்குகளை கனீமின் சொந்த தேவைக்கு எடுத்தார்.

6 ரூபா 150000 மேலதிக முதலீடு செய்தார்.

7 நண்பரிடமிருந்து ரூபா 25000 கடன் பெற்றார்.

8 உடன் காசுக்கு ரூபா 10000 பெறுமதியான சரக்குகளும், ரூபா 50000 பெறுமதியான மோட்டார் வாகனமும் கொள்வனவு செய்யப்பட்டது.

9 ரூபா 40000 தளபாடம் ராஜா கம்பனியிலிருந்து கடனாக வாங்கப்பட்டது.

10 நண்பனிடம் இருந்து பெற்ற கடனின் பகுதியைத் தீர்ப்பதற்காக ரூபா 10000 செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது:**

i. மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்க.

ii. பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்துக.

iii. 2012 ஜனவரி 10 இல் பரீட்சை மீதியைத் தயாரிக்க.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

06. (அ). பின்வருவனவற்றினை விளக்குக.

i. சொத்துக்களும் பொறுப்புக்களும்

ii. கொள்வனவு நாளேடும் விற்பனை நாளேடும்

(05 புள்ளிகள்)

(ஆ). வணிக நிறுவனம் ஒன்றின் தரவுகள் பின்வருமாறு

1. நிலம்
2. மோட்டார் வாகனம்
3. வங்கிக்கடன்
4. வருமதி உண்டியல்
5. சென்மதி உண்டியல்
6. தொக்கு
7. அட்டுறு மின்சாரம்
8. அட்டுறு முதலீட்டு வருமானம்
9. முற்பணமாக கொடுத்த வாடகை
10. முற்பணமாக பெற்ற வட்டி
11. கடன்பட்டோர்
12. கடன் கொடுத்தோர்
13. மூலதனம்
14. முதலீடு
15. ஈட்டுக்கடன்
16. தளபாடம்
17. நிலையான வைப்பு
18. குறுங்காலகடன்
19. பற்று
20. இலாபம்

மேற்குறிப்படப்பட்டவற்றை நடைமுறை அல்லாச் சொத்து, நடைமுறைச் சொத்து, நடைமுறை அல்லாப் பொறுப்பு, நடைமுறைப் பொறுப்பு, உரிமை போன்றவற்றில் எவ்வகையைச் சேருமென வகைப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)